பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்! 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 08 திங்கட்கிழமை (23-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 361

உளவுப் படையினர் பற்றாக்குறை:

புலிகளின் செயற்பாடுகளை கொழும்பில் தடுப்பது கஷ்டம்!

இராணுவம் கைவிரிப்பு

கொழும்பு, நவம்பர் 23

கொழும்பில் இயங்கி வரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களைக் கண்டுபிடிக்க போதிய எண்ணிக்கையான உளவு அதிகாரிகள் இல்லை. இதனால் புலிகளின் செயற்பாட்டை கொழும்பில் தடுப்பது மிகவும் கஷ்டமானதாகும்.

—இவ்வாறு கைவிரித்திருக்கிறது ஸ்ரீலங்கா இராணுவம்.

இதனால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் இராணுவத் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் புதிய உத்திகளை கண்டுபிடிப்பதும் சிரமம்

மணிலா, நவ. 23

கொழும்பில் தாக்குதல்களை நடத்தும் வேளைகளில் — தங்களது முறைகளை மாற்றி, மாற்றி—புதிய உத்திகளை விடுதலைப் புலிகள் கையாண்டு வருகின்றனர்;

இவற்றைக் கண்டு பிடிப்பது ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினருக்கு இயலாத காரியமாக உள்ளது.

இவ்வாறு செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

(உ-எ)

மட்டு. ஆரையம்பதியிலிருந்து புலிகள் குழு கொழும்புக்கு!

பிரமுகர்கள் உயிருக்கு ஆபத்தாம்

கொழும்பில் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் வாதிகளின் உயிர்களுக்கு உலை வைக்கும் நோக்குடன் மட்டக்களப்பு —ஆரையம்பதியில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டு குழுக்கள் கொழும்பு வந்திருப்பதாக ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளின் உளவுப் பிரிவு தெரிவித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து சகல முக்கிய தரப்பினருக்குமான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

கொழும்பு நகரின் வீதிகளில் குவிக்கப்பட்ட படையினர் சனியிரவு வாபஸ்

லண்டன், நவ. 23

கடந்த ஒரு வார காலமாக கொழும்பின் நகர வீதிகளில் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரையும் மற்றைய படைகளைச் சேர்ந்தோரையும் நேற்று முன்தினம் இரவு வீதிகளில் காணமுடியவில்லை.

பி. பி. ஸி. இத்தகவலை வெளியிட்டது.

நாட்டின் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு நடத்திய "எக்ஸ்போ - 92" வர்த்தகக் கண்காட்சி முடிவடைந்ததை அடுத்தே வீதிகளில் குவிக்கப்பட்டிருந்த படையினர் வாபஸ் பெறப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்த விழாவை அலங்கரிப்பதற்காக கொழும்பு நகர வீதிகளின் மூலைகளில் வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டிகள் இன்னமும் அங்கே காணப்படுகின்றன என்று பி.பி.ஸி. குறிப்பிட்டது.

(உ-3)

தற்கொலை வீரரும் தம்மை பொலீஸில் பதிந்திருந்தாராம்!

கொழும்பு, நவ. 23

கடந்த திங்களன்று கடற்படைத் தளபதியை கொலை செய்த தற்கொலைப்படை வீரரும், தனது பெயரைப் பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்திருந்ததாக நம்பப்படுகிறது;

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

தற்கொலைப்படை வீரர்களிடமிருந்து பிரமுகர்களை எப்படிப் பாதுகாப்பது என்பது பாதுகாப்புப் படையினருக்கு பெரும் வேதனையும்,

(2 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில் 3 பொம்மர்கள் நோட்டம்

பருத்தித்துறை, நவ. 23

வடமராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் மூன்று பொம்மர்கள் வட்டமிட்டு நோட்டமிட்டன.

பருத்தித்துறை மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளை மையமாகக் கொண்டே பொம்மர்கள் சுற்றின. ஆனால் தாக்குதல் ஏதும் நடத்தவில்லை.

மூன்று பொம்மர்கள் ஒரே சமயத்தில் வந்ததால், மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

(ஒ-118-144)

வல்வை கடலில் சூடு

யாழ்ப்பாணம், நவ. 23

வல்வைக் கடலில் நேற்றுக் காலை, ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதலை நடத்தினர்;

மீன்பிடி வள்ளங்களை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டது. தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

(ஒ)

சபாரத்தினம் காலமானார்

யாழ்ப்பாணம், நவ. 23

"ஈழநாடு" பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் திரு. ந. சபாரத்தினம் தமது 79 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

அன்னார் 1981 முதல் 1988 வரை இப்பதவியை வகித்தார். மன்மொழிப் புலமை பெற்ற திரு. சபாரத்தினம் தமது ஆசிரியத் தலையங்கங்களால் வாசகர் மனதில் இடம் பிடித்துக் கொண்டவர். அவர் 1984 ஆம் ஆண்டில் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு "ஊரடங்கு வாழ்வு" என்ற நூல் வடிவில் சென்னையில் வெளியிடப்பட்டது.

திரு. சபாரத்தினம் சிறந்த

(2 ஆம் பக்கம் பார்க்க)

கடத்தப்பட்டனர்

கொழும்பு, நவ. 23

கொக்கட்டிச்சோலை பாதுகாப்புப் படையினரின் முகாம் அருகில் வசித்து வந்த முருகுப்பிள்ளை பாஸ்கரன், வேலுச்சாமி ஆகிய இருவரும் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று மட்டக்களப்புப் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை—

ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தைச் சேர்ந்த கணபதிப்

(2ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா அரசு அறிவிப்பு:

வீட்டில் வெளியாரை தங்க வைக்க கட்டுப்பாடு

நேற்று அவசரகாலப் பிரகடனம்

கொழும்பு, நவ. 23

வீடுகளில் குடும்பத்தினர் தவிர்ந்த மற்றையோரைப் பொலீஸாருக்கு அறிவிக்காமல் தங்க வைத்திருப்பதைத் தடுக்கும் அவசரகாலப் பிரமாணம் நேற்று நள்ளிரவில் இருந்து நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை முழுவதிலும் மற்றும் அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் இது நடைமுறைக்கு வருகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றின்படி, அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒரு புதிய பிரமாணம் நேற்று (புதிய) நள்ளிரவில் இருந்து அமுலுக்கு வந்துள்ளது.

இந்தப் பிரமாணத்துக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

மெரினாவில் வரும் அரிசி, மா கப்பலில் வைத்தே சோதனை!

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து 998 மெற்றிக் தொன் அரிசி, மா ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு "மெரினா" கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அமைந்திருக்கும் காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பொருள்களே "மெரினா" கப்பல் மூலம் எடுத்து வரப்படுகின்றன.

களஞ்சியத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த அரிசி, மா போன்றவை சுகாதார முறைப்படி கத்திரிக்கப்பட்டு வாழ், மாவட்டத்துக்கு பாவனையாளர்களுக்காக எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொருள்களை கப்பலில் இருந்து இறக்குவதற்கு முன்னரே, கப்பலில் வைத்து அவற்றை சோதனை செய்து பார்ப்பதற்கு வாழ், சுகாதாரத் திணைக்களம் வைத்திய குழு இணைந்திருப்பதாகவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கல்முனையில் பஸ்ஸில் குண்டு கண்டுபிடிப்பு!

கொழும்பு, நவ. 23

கல்முனையில் பஸ் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த பார்சல் குண்டு ஒன்று தக்க சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் பெரும் அழிவு தவிர்க்கப்பட்டதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

அதிரடிப்படைப் பொலீஸார் இக்குண்டை வெளியில் எடுத்து அதை வெடிக்கச் செய்தனர். ஐந்து நிமிட நேரங்களில் அது வெடித்தது. சேதம் ஏதும் ஏற்படவில்லை.

கல்முனையில் இருந்து மன்னாருக்குச் செல்லவிருந்த பஸ்ஸிலேயே பார்சல் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாவீரர் வாரச் சிறப்பு ஆக்கங்கள்:

பருத்தித்துறையில் 90 அடிக் கப்பல்; நாவற்குழியில் ஆனையிறவு முகாம்!

யாழ்ப்பாணம், நவ. 23

மாவீரர் வாரத்தையொட்டி பாரிய பந்தல்கள், கண்ணைக் கவரும் அலங்கார வளைவுகள் என்பனவற்றுடன் பல சிறப்பான ஓவிய மற்றும் சிற்பக் கலை ஆக்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் மாவீரர் வாரத்தையொட்டி 90 அடி நீளமான கப்பல் ஒன்று கட்டப்பட்டுள்ளது. பருத்தித்துறை பழைய [illegible] அருகாமையில் கட்டப்பட்டுள்ள [illegible] செவ்வாய்க்கிழமை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையினால் திறந்து வைக்கப்பட உள்ளது.

இதேவேளை நவிண்டிலில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் வடமராட்சிப் பகுதியில் உயிர்த்தியாகம் செய்த 800க்கும் மேற்பட்ட மாவீரர்களுக்கும் தீபம் ஏற்றப்படும் இந்தச் சிறப்பு நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

நாவற்குழிப் பாலத்தடியில் அமைக்கப்பட்டுள்ள ஆனையிறவு முகாமின் மாதிரியும் மாவீரர் வார சிறப்பு உருவாக்கங்களில் ஒன்றாகும். மாதிரி ஆனையிறவு முகாம் இருக்கும் கடல்நீர்ப் பகுதியில் பீரங்கிப் படகொன்று செய்து வைக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு இராணுவ முகாமில் இருப்பது போன்ற காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இராணுவச் சிப்பாய்கள் நிற்பதுபோல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குமண' நாளை வந்து சேரும்

உணவுப் பொருள்கள், நவீன பொதிகள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு "குமண" கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தர பரீட்சைக்கு தேவையான காகிதாதிகளும் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குமண வந்து சேர்ந்ததும் அதில் இருக்கும் பொருள்களை இறக்கும் வேலை உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை குமண கப்பலை பொருள்களை இறக்கி ஏற்றும் பணியில் மட்டுமே ஈடுபடும் என்றும் —

நேயாளர்களையோ அரச ஊழியர்களையோ திருமலைக்கு ஏற்றிச் செல்லும் பணியில் அது ஈடுபடாது என்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடற் கொந்தளிப்புக் காரணமாகவே ஆட்களை ஏற்றிச் செல்லும் சேவையில் இம்முறை குமண ஈடுபடாது என்று தெரிவிக்கப்பட்டது.

இன்று

வடமராட்சிக் கல்விக் கோட்டப் பகுதியில் ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்பின் முன்னோடிப் பரீட்சையில் கணித பாட விடைத்தாள் மதிப்பீடு செய்த சகல ஆசிரியர்களையும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் பங்குபற்றுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-118)

★ ★ ★

சாரணர்கள், திரிசாரணர்கள், சாரண ஆசிரியர்கள், முழுச்சாரணர் தலைவர்கள் உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கான விசேட கூட்டம் நாளை இன்று பி.ப. 3 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏஜென்ஸிச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

கடற்படைத் தளபதி கொழும்பில் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு மாநகரில் விடுதலைப் புலிகள் தலைமறைவாக இயங்கக் கூடும் என்றும் இராணுவத்தினர் எச்சரித்துள்ளனராம்.

கிழக்கு மாகாணத்தில் மோட்டார் சைக்கிள்கள் சில காணாமற் போயுள்ளன என்றும் —

இவற்றை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்று இருக்கக்கூடும் என்றும் —

இந்த மோட்டார் சைக்கிள்களைப் பாவித்து விடுதலைப் புலிகள் கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் தாக்குதல்களை நடத்தலாம் என்றும் இராணுவம் கருதுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

வீட்டில் வெளியாரை...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அமைவை—

ஏதேனும் இடத்தில் வசிக்கும் ஒவ்வொரு குடியிருப்பாளரும் தனது வீட்டில் தங்கியுள்ள ஆட்களின் பெயர்ப் பட்டியலை அந்தப் பகுதிப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

குடும்ப அங்கத்தவர்கள் வேறாகவும்—

வேலையாட்கள் மற்றும் ஆட்கள் வேறாகவும் இந்தப் பட்டியலில் காட்டப்பட வேண்டும்.

இப்பட்டியலில் காட்டப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்பட்டால் அது பற்றி குடியிருப்பாளர் அப்பகுதி பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.

இப்பட்டியலில் காட்டப்படாத ஆட்களை பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்காமல் தமது வீடுகளில் தங்க குடியிருப்பாளர் அனுமதிக்கக் கூடாது.

இந்தப் பிரமாணத்தின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள பொறுப்புகளில் இருந்து எவரேனும் தவறினால் அவர் குற்றவாளியாகக் கருதப்படுவார்;

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

சபாரத்தினம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விமானும் ஆவார்.

1964 முதல் 1971 வரை அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்தார். அதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவராகவும் அவர் பதவி வகித்தார்.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சபாரத்தினம் காரைநகர் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பழைய மாணவருமாவார்.

நீண்ட காலம் ஆசிரியப் பணிபுரிந்த அவர் கன்னாகம் வித்தியாரோதயக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தற்கொலை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சோதனையும் தரும் விடயமாக இருக்கிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து வரும் தமிழர்களிடம் இருந்துதான் ஆயுதம் வருகிறது என படை அதிகாரிகள் நம்புகின்றனர்.

இப்படி வருபவர்கள் கொழும்பில் தங்கும் போது, கொழும்பில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறை ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது.

ஒரு விசேட அடையாள அட்டை வழங்குவதுடன் கூடிய பதிவு முறை ஒன்று குறித்து அதிகாரிகள் சிந்திக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

ஆனால் இம்முறை, தீர்வுக்கு பதிலாக மனக்கசப்பையே ஏற்படுத்தக்கூடும்.

கடற்படைத் தளபதியைக் கொன்ற தற்கொலைப் படை வீரரும் தமது பெயரைப் பொலீஸில் பதிவு செய்திருந்தார் என்பதால். இத்தகைய முறை பலனளிக்குமா என்பது சந்தேகம்தான். — இப்படி அந்த செய்தி ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது (உ-3-6)

பருத்தித்துறை...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

முகாமைச் சூழவுள்ள மற்றைப் பகுதிகளிலும் கடல்நீர் நிலைகளிலும் சோதனைகள் நவீன ரக ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனையிறவு முகாம் மாதிரியைப் பார்ப்பதற்கு பல இடங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வந்து கூடுகின்றனர்.

குருநகர்ப் பகுதியில் மீன்பிடி வலைகளைக் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் மாதிரிக் கடற்படை ரோந்துப் படகு ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் அமைந்துள்ள பிரமாண்டமான பந்தலில் 182 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் நேற்று முன்தினம் நிறுத்தவைக்கப்பட்டன.

வடமாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்றுக் மாவீரர் தினம் அனுஷ்டிக்கும் நிகழ்ச்சிகள் வழமையாக நடைபெற்றன. (உ-118-162-51-30)

கடத்தப்பட்டனர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை சந்திரசேகரம் என்பவர் இனந்தெரியாதவர்களால் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

வெளிவந்துவிட்டது

வர்த்தகம் O/L கடந்த கால வினா-விடை
16 வருடங்கள்
Commerce + Finance A/L (1992 Sp.)
திரு. செல்வநாயகம் (றோயல் கல்லூரி)
அளவையியல் A/L வினா-விடை பகுதி-I + II
திரு. க. கேசவன்
ஆசிரியர் இயல்
திரு. சபா. ஜெயராசா
ஆகிய பாட நூல்கள்:
கிடைக்குமிடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(23359)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 28 — 10 — 1919

உதிர்வு: 15 — 12 — 1990

அமரர் நா. கந்தசாமி
(ஸ்ரீலங்கா புத்தகசாலை உரிமையாளர்)
திதி: 23 — 11 — 1992

எம் உயிர்த் தெய்வமே!
நீங்கள் பிரிந்து போன உண்மையை - இன்றும்
எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை!
ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறாத்துயரில் மூழ்கிக் கொண்டு - நித்தம்
உங்கள் நினைவுகளைச் சுமக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
வீட்டுப்பிள்ளைகள்.

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம். (23358)

அஞ்சலி

அமரர் ந. சபாரத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)
1964 — 1971

எம்மிடையே வாழ்ந்த அறிவு மேதை
இந்துவின் மைந்தன்
கல்லூரியின் முன்னாள் அதிபர்
அன்னார் பிரிவு
எமை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி
எமது அஞ்சலியை சிரம் தாழ்த்தி
வழங்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (கி/3886)
22-11-1992

யாழ். இந்துக் கல்லூரி

கல்லூரியில் உள்ள சகல மாணவ கழகங்களின் உறுப்பினர்களையும் அவர்களது கழக சீருடையில் இன்று திங்கள் காலை பாடசாலைக்குச் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்,
(கி/3888) யாழ் இந்துக் கல்லூரி

கண்ணீர் அஞ்சலி

அமரர் ந. சபாரத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)
1964 — 1971

எமது அன்னை யாழ். இந்துவின்
புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரும்
இந்துவின் மைந்தனும்
எமது இனத்தின்
தலைசிறந்த கல்விமானுமாகிய
அன்னாரின் மறைவு எம்மை
கண்ணீர் வெள்ளத்தில்
ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்கள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்,
யா. இ. க.

பிற்குறிப்பு:
சகல பழைய மாணவர்களையும் இன்று காலை 10 மணிக்கு யாழ். அந்தியடி வீதியில் உள்ள அமரர் சபாரத்தினம் அவர்களின் இல்லத்திற் கூடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(கி/3887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பூசி ஏற்றுவதற்கு அலையும் பச்சிலைப்பள்ளிப் பகுதி மக்கள்

தென்மராட்சி, நவ. 23

பச்சிலைப்பள்ளிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்து மற்றும் ஏற்பு தடுப்பூசி மருந்து போன்றவற்றை ஏற்றுவதற்கு சாவகச்சேரி, மந்திகை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல அரசினர் வைத்திய சாலையில் மண்எண்ணெய்யில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி இல்லாததாலேயே இந்நிலை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

மேலும் கர்ப்பிணித் தாய்மாரின் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான முக்கட்டு மருந்து, போலியோ மருந்து ஏற்றுவதற்கும் இப்பகுதி மக்கள் அலையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல அரசினர் வைத்திய சாலைக்கு மண்எண்ணெய்யில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டியை கொள்வனவு செய்ய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் இவ்வருட நடுப்பகுதியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் இந்த நிதி இதுவரை பல வைத்தியசாலையினர் கரம் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

[த-117]

மாவீரர் வார சிந்தனை

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது."

★ இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது, எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் எனக்கு சுவையான உணவைத் தந்து என் பசியைத் தீர்த்து வைக்கிறது"

— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.

சத்தியசாயி பாவாவின் பிறந்த தினம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 23

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 67 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனை யொட்டி யாழ்நகரப்பகுதியிலுள்ள சாயி சமித்திகளிலும், மண்டபங்களிலும் விசேட பூசை வழிபாடுகளும், பஜனைகளும் இடம்பெறவுள்ளன.

திருநெல்வேலி சேர்ச்சொன். இராமநாதன் வீதியில் உள்ள சத்திய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் இன்று அதிகாலை 4-45 மணி முதல் பஜனை மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

நல்லூர் நல்லூர்க்கந்தன் வீதியில் உள்ள சாயி மண்டபத்தில் இன்று மாலை 2-00மணிக்கு பஜனை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி சத்திய சாயி சமித்தியில் இன்று நடைபெறவுள்ள பிறந்த நாள் விழாவில் சிறப்பு விருந்தினராக ஆத்ம ஜோதி நா. முத்தையா கலந்து கொள்வார்.

[த-5-15-31-17]

கம்பு மா பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 23

கம்பு மாவின் உணவுப் பயன்பாடு பற்றிய செய்முறைப் பயிற்சியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தி வருகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் வடமராட்சி கோட்ட பகுதியை உள்ளடக்கிய கிராமிய உற்பத்திக் குழுவிலிருந்து பெண்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

[ஒ]

UNIVERSITY OF JAFFNA

Tender Notice

Tenders are invited from Contractors registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD for.

"Improvements to Vithiananthan Library"

Tender forms can be obtained from works Engineer, University of Jaffna from 24-11-92 — 27-11-92 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fee.

(a) Refundable - Rs. 3,000/-

(b) Non - Refundable - Rs 250/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a.m. on 1992-12-10.

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender Board University of Jaffna reserves the right to reject any tender.

- REGISTRAR.

University of Jaffna,
P. O. Box 57,
Jaffna.

(C-3873)

திம்பிரிகஸ்ஸாய சூட்டுச் சம்பவம்;

கிரிலப்பனையில் ஏ.கே. 47 பொலீஸாரினால் மீட்பு!

கொழும்பு, நவ. 23

கொழும்பில் திம்பிரிகஸ்ஸாயவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் ஜனாதிபதியின் செயலாளரின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் காயப்பட்ட சம்பவத்தை அடுத்து கிரிலப்பனையில் ஏ. கே. 47 ரைபிள் ஒன்றை பொலீஸார் கண்டெடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிரிலப்பனைப் பகுதியில் பொலீஸார் தேடுதல் ஒன்றை நடத்தியபோது அங்குள்ள வீடு ஒன்றில் இருந்த அந்தத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது;

இந்த ரைபிளில் இருந்த இரு வேட்டுகள் தீர்க்கப்பட்டிருந்ததையும் கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டுக் குசினிக்குள் இந்த ரைபிள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

இப்படி கொழும்பு தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது;

கிரிலப்பனையில் இருவர் கைது!

கொழும்பு, திம்பிரிகஸ்ஸாயப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக கிரிலப்பனை பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து ஓர் ஆணையும், ஒரு பெண்ணையும் பொலீஸார் கைது செய்தனர்.

அந்தப் பெண், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தாதிப் பயிற்சி பெற்றவராம் என்று வீரகேசரிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது; [த எ]

மட்டு.எம்.பி. ஹிஸ்புல்லா மீது முஸ்.காங்கிரஸ் நடவடிக்கை!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜனாப் ஹிஸ்புல்லா மீது கட்சியின் அரசியல் உயர்பீடம் ஒழுக்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளது;

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பீடம் ஜனாப் ஹிஸ்புல்லாவிடம் கடந்த சனிக்கிழமை அவரிடம் இருந்து விளக்கம் கோரும் கடிதம் ஒன்றை வரவளித்தது;

ஜனாப் ஹிஸ்புல்லா தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு 2 வாரங்களுக்கு இடையில் விளக்கமளிக்க வேண்டும் என்றும்—

விளக்கமளிக்கத் தவறின் கட்சியில் இருந்து அவர் நீக்கப்படுவார் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06 — 04 — 1978

உதிர்வு: 23 — 11 — 1990

செல்வன் செல்வராசா சசிகுமார்

[யாழ். மத்திய கல்லூரி மாணவனும் - அச்சுவேலி கொல்வெல்த். இடைக்காடு மகாவித்தியாலய முழை மாணவனும்]

திதி: 30 — 11 — 1992 [திங்கட்கிழமை]

ஈரக்கமற்ற ஹெவி வாளின் கறுறி
ஏகிவிட்ட ஒண்டுமகனு எமனாச்சே!
சாவு மணி அடிப்பதற்குத் தூதாய் வந்த
சண்டாளர் நிம்மதியைக் குலைத்தேவிட்டார்
மேவுமருப் "சகி"யே நீ எங்கள் செல்வம்
மேதினியை விடுகின்று ஈராண்டாச்சு
நீ விரும்பிப் பூசித்த நாமெல்லோரும்
நெக்குருகிப் பிரார்த்திப்போம் சாந்திக்காக;

எமது அன்புச் செல்வத்தை என்றும் நினைவுகூரும்;
அன்பகலா அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர், ஆசிரியர்கள்,
நண்பர்கள்.

"நாயகன் பிரான்சிபோப்",
சங்கானை வீதி, அச்சுவேலி. (23348)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சண்முகம் ஞானப்பிரகாசம்

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கூட்டுறவுத் தலைவர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்த தினமாகிய இன்று (23-11-92) அமரர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவர் வழி நிற்போம்;

யாழ். மாவட்ட உயர்வலய அபிவிருத்தி மன்றம்.
நல்லூர் பிரதேசிய சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சபை.
நல்லூர் கந்தன் கி. க. க. சங்கம்.
நல்லூர் கந்தன் உயர் வலய அபிவிருத்தி மன்றம்.

(23360)

45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 26 — 05 — 1963

இறப்பு: 10 — 10 — 1992

திருமதி ரஜனி ஸ்ரீரஞ்சன்

உன் உள்ளத்தில் கள்ளமில்லை
உன் பேச்சினிலும் கபடமில்லை
பொறுமைக்கும் இலக்கணமாய்
பெண்மைக்கும் உதாரணமாய்
தாய்மைக்கும் தனிநிகராய்
தனியொருத்தி நீ நின்றாய்
இனியொருத்தி உன்போலே
எமிடத்தில் யார் வருவார்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணியாளர்கள்
வடமராந்திய போக்குவரத்துச் சபை.
பலாலி வீதி,
கோண்டாவில்.

(23333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பிறிமா பிறவுன் + கறுப்பு பேப்டுக் குஞ்சுகளும், கோழிகளுக்கான மருந்துகளும் உடன் விற்பனைக்குண்டு; மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5588)

மணமகள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற, சித்திரை நக்ஷத்திரம், 35 வயது (English Assistant) ஆகியிருக்கு படித்த, அழகிய பெண் உடன் தேவை. புதிய மாக்கல்யா மக்ஸ்ரி சேவிஸ், 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (23336)

விண்ணப்பித்திர்களா?

சமய அறிவுப் போட்டி 1992 கந்தரோடை அருள்மிகு வைரவர்கோ அம்மன் ஆலயத்தில் சோமவாரத் திருவிழாவில் நடைபெறுகின்றது. விண்ணப்பங்கள் முடிவு திகதி மாணவருக்கு 30-11-92. ஏனையோருக்கு 07-12-92 கிளாத்தாக்கள் 18 - 12 - 92 நாவலர் விழாவில் விநியோகிக்கப்படும். (5487)

தவறிவிட்டது

19 - 11 - 1992 காலை சிவப்பிரகாசம் வீதிக்கும், மனோகராச் சந்திக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்னரும் முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். கா: நித்தியானந்தன், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (5590)

சங்கீதம்

எதிர்வரும் வருப்பேற்றத் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் வருப்புகளில் பயிலும் மாணவர்க்கு ஏற்றது சங்கீதவினா-விடை. ஆக்கம்: திருமதி தாக்ஷாயணி சிவானந்த சர்மா. (23274)

O/L Dec. 1992

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், சித்திரம், நடனம், சங்கீதம், விவசாயம், மனைப்பொருளியல் பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond - Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (கி/3883)

கலண்டர்கள்

வியாபார சிந்தனையா? விளம்பரம் பற்றிய சோகமா? மூன்று விதமான அழகிய ஓவ்செட் கலண்டர்கள் உங்கள் விளம்பரத்திற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது; இன்றே எங்கை நாடுங்கள்; ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (23355)

அடையாள அட்டைப் படம்

தேவை அடையாள அட்டைப்படம் பிடிக்க ரூபா 40/-. விரைவாக வழங்கப்படும்.

★ குகன் ★
ஸ்ரூடியோ
பருத்தித்துறை.
(கி-3878)

22ஆவது பிறந்த தினம்

திருமதி சோதிலிங்கம் ரூபா

வைதடி மேற்கு - சரஸ்வதி வீரோர்ஸ் உரிமையாளர் வர; மார்க்கண்டு-இலட்சுமி தம்பதிகளின் புத்திரியும் தற்பொழுது டென்மார்க் நாட்டில் வசிப்பவருமான திருமதி சோதிலிங்கம் ரூபா இன்று (23-11-92) தனது 22ஆவது பிறந்த தினத்தை டென்மார்க்கில் தனது கணவருடன் கொண்டாடுகின்றார்.

இவரை சீரும் சிறப்புடன் பெற்று, பல்லாண்டு வாழ்கவென கணவர்-சோதிலிங்கம், அப்பா, அம்மா, தங்கைகள்-சுபா, சேனா, தம்பி- மதன் மற்றும் சகோதரர் மாமா, பசுபதி மாமி, மச்சான்மார்- இராஜலிங்கம், குணலிங்கம், அமிர்தலிங்கம், சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம் மற்றும் மாமி அக்கா, டென்மார்க்கில் வாழும் அக்கா, அத்தான் ஆகியோர்களும் வாழ்த்துகின்றனர். (23357)

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சூசைப்பிள்ளை சீமாம்பிள்ளை
உதிர்வு: 23-11-1982

"பத்தாண்டு உருண்டதையா
நெஞ்சங்கள் பற்றி எரியுதையா
மறக்க முடியுமா நீர் சொரிந்த பாசத்தை."

இவரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சீமான் லொட்ஜ்,
5/3, அச்சுக்கூட ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (23354)

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

கல்வியாண்டு - 93

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 05-12-1992 (சனி)

விஞ்ஞானம்
இரா: செல்வவடிவேல்
சன்
கணிதம்
இந்திரன்
வாமதேவன்
லோகேஸ்வரன்
தமிழ்/சமயம்
பண்டிதர்
சுந்தரவிநாயகம்
யோகராணி
சமூகக்கல்வி
வேலா
கிளேசன்
நிர்மலா
ஆங்கிலம்
மகாவிநாயகம்
ரவி
தர்மலிங்கம்
ரமேஸ்
வர்த்தகம்
நவம்

(கி-3786)

ஓராண்டு நினைவஞ்சலி

நித்தியா

மலர்வு: 02 - 07 - 1987
உதிர்வு: 23 - 11 - 1991

சமுதாயத்தில் சலுகைகளுக்கு உரித்துடையவர்களான "குழந்தைகள்" அவர்களுடைய வாழ்வுரிமை மறுக்கப்பட்டு தினமும் மரணிக்கின்றார்கள்.

எமது குழந்தைகளின் மரணம் எதிரிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம்
ஆனால் நாம் எமது எதிர்காலச் சந்ததியினரது இழப்புக்களை
மௌனமாக அங்கீகரிக்க முடியாது.
குழந்தைகளின் மரணத்துக்கு எதிரியே காரணமென
மௌனம் சாதிக்கப்போகின்றோமா?
அல்லது குழந்தைகளின் மரணத்துக்குக் காரணங்களான
சுகாதார சீர்கேடுகள், போஷாக்குணவு கிடையாமை,
மருத்துவ வசதிகள் கிடையாமை போன்றவற்றை
முறியடிக்க ஒன்றுபட்டு செயல்படப் போகின்றோமா?
துறைசார் நிபுணர்களின் திட்டமிடலில்
அனைவரும் ஒன்றிணைந்து எமது கடமை நேரத்தை இரட்டிப்பாக்கி
தீவிரமாக செயல்படுவோமாயின் எமது குழந்தைகளை காக்க முடியும்
இவ்விடயத்தில் அசிரத்தை காட்டுவோமாயின்
ஐந்து ஆயிரம் குழந்தைகளின் மரணத்தில் நாங்களும் பங்காளிகளாகின்றோம்.

சிந்திப்போம் — செயல்படுவோம்.

பெற்றோர், சகோதரி

கொக்குவில். (23353)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 07 — 1916
மறைவு: 04 — 12 — 1991

புண்ணியதிவு 3ஆம் வட்டாரம்

அமரர் நல்லதம்பி தம்பிஐயா

(ஓய்வு பெற்ற விநிதர், காணி அபிவிருத்தி இலாகா)

திதி: 23 — 11 — 1992

இவ்வமிழ்தோம் இயற்கைச் செல்வமிழந்தோம்,
ஊரிழந்தோம் உற்றார் தனைப் பிரிந்தோம்
உங்களையும் இழந்தோம்
எங்கள் நெஞ்சம் நிறைந்தவரே, அன்புத் தெய்வமே!
பாசம் உள்ள எம் இனிய அப்பாவே!
அன்பான மாமாவே!
பிரியமுள்ள தாத்தாவே!
உங்கள் நினைவுகளை நெஞ்சில் நிறுத்தி
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்;

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரி, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

50, புறூடி லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (23347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தமிழர் பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்டம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசம் என்று அரச தரப்பில் கூறிக்கொள்ளப்படுகிறது. ஆயுதப்படைகள் அங்கு வாழும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன என்றும், சிவில் நிர்வாகம் சீராக நடப்பதற்குப் படைகள் பெரிதும் துணை புரிகின்றன என்றும் புகழப்படுகிறது!

கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக அங்கிருந்து விடுதலைப் புலிகளை விரட்டிவிடப் போவதாகப் படை அதிகாரிகள் ஒரு சில மாதங்களிற்கு முன்னர் 'வீரம்' பேசியதும் உண்டு. அதன் பொருட்டு அங்கு நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்கள் தோல்வி அடைந்ததால் இப்போது அது குறித்து முச்சு விடுவதில்லை!

படைத் தளபதிகளே கொல்லப்படும் போது இராணுவத் தாக்குதல்களை நடத்த வா முடியும்? சிப்பாய்கள் மனப்பலம் இழந்திருக்கையில் எப்படிப் போரை முன்னெடுத்துச் செல்வது என்று தெரியாமல் அரச, இராணுவ உயர் மட்டங்கள் திண்டாடுகின்றன.

ஆனால், தமிழர்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு அவர்களை இம்சைப்படுத்துவதையும், பலவித அட்டூழியங்களைப் புரிவதையும் மட்டும் அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை! மட்டக்களப்பில், தமிழர் கிராமமான ஆயித்தியமலை மக்கள் இரவில் காடுகளில் தஞ்சம் புகுந்து அங்கு ஒளித்து வாழ்கிறார்கள் என்ற செய்தி எதனை எடுத்தியம்புகிறது?

தமிழ்ப் பெண்கள் இரவு வேளைகளில் வீடுகளில் தங்க முடிவதில்லை. அர்த்த சாமத்திலும் விசாரணை செய்வதற்காக எனக் கூறிக்கொண்டு படையினரால் கடத்தப்படுகிறார்கள்.

சர்வதேச மன்னிப்புச்சபை எப்படித் தொண்டை கிழியக் கத்தினாலும், ஏனைய மனித உரிமை இயக்கங்கள் எத்தனை தடவை கண்டனங்களைத் தெரிவித்தாலும், மனித உரிமைகள் மீறப்பட்டால் கடன் தரமாட்டோம் என்று எத்தனை நாடுகள் மிரட்டினாலும், ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் தமிழர்களை இம்சைப்படுத்துவதையும், கொடுமைப்படுத்துவதையும் நிறுத்தப் போவதில்லை. இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழ்க் கிராமங்களில் நடப்பவை இதனையே எடுத்துச் சொல்கின்றன!

இரவில் படையினர் நடத்தும் அட்டூழியங்களுக்கு மத்தியில், அடாவடித்தனங்களுக்கு மத்தியில் வீடுகளில் தங்குவதைவிட, பயங்கர மிருகங்கள் மற்றும் விஷப் பிராணிகள் மத்தியில் காடுகளில் தங்குவது பாதுகாப்பானது என்று மட்டக்களப்புத் தமிழ்ப் பெண்கள் கருதுகிறார்கள். ஆயுதப்படையினர் வனம் வாழ் மிருகங்களை விடப் பயங்கரமானவர்கள் என்பதே இதன் முடிவு.

இந்த லட்சணத்தில், ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினர் தமிழர்களுக்கு அளிக்கும் பாதுகாப்பு எப்படி அமையும் என்பதை எவரும் உணரமுடியும். தமிழர்களுக்கு அவர்களே பாதுகாப்பாக முடியும். தமிழர்களின் பாதுகாப்பு அவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஆகையால் தமிழர் பிரச்சினைக்கு முன்வைக்கப்படும் எந்தத் தீர்வும், தமிழர் பிரதேசங்களில் தமிழர்களைக் கொண்ட பாதுகாப்புப் படைகளை உருவாக்க வகைசெய்ய வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் இருந்து ஸ்ரீலங்கா ஆயுதப் படைகள் முற்றாக வாபஸ் பெறப்படுவதுகட்டாயதேவை. அப்படி ஒரு நிலை தோன்றுவதற்கு தமிழர்களுக்கெனத் தனி அரசு இல்லாமல் சாத்தியமாகாது.

புகழுடலிகள் ஏன் புதைக்கப்பட வேண்டும்?

மக்கள் மனதில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புகிடங்குகள் போராளிகளின் கல்லறைகள்

வீரமரணமடையும் புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம் முடிவானது போராளிகளுக்கு மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனச் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட 'மாவீரர் துயிலும் இல்லங்களில்' இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்பட வேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம்? எல்லாவற்றையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

இதுவரை காலமும் வீரமரணமடைந்த எமது போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மதசம்பிரதாயங்களின் அடிப்படையில் உடல்கள் புதைக்கப்படுவதோ, தகனம் செய்யப்படுவதோ நடைமுறையாகி வந்தது.

ஆனால், இனிமேல் வீரமரணமடையும் அனைத்துப் புலி வீரர்களின் உடல்களையும் புதைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். புதைக்கப்பட்ட இடத்தில் அவ்வப் போராளிகளின் பெயர் கூறும் கல்லறைகள் எழுதப்பட்டு அவை தேசிய நினைவுச் சின்னங்களாகப் பராமரிக்கப்படும். இவைகள் காலங் காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

நாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை "மாவீரர் துயிலும் இல்லங்களில்" புதைத்து அங்கே நினைவுக் கற்கள் நாட்டப்பட வேண்டும் என்பதே போராளிகளின் விருப்பமாகும்.

மணலாறுக் காட்டில்

இந்த விருப்பம் மிக அண்மையில் ஏற்பட்டதொன்றல்ல. இந்திய-புலிகள் போர்க் காலத்தில் வன்னிக்காட்டுக்குள்ளேயே போராளிகளின் இவ்விருப்பங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

பிரதானமாக, தலைவர் பிரபாகரன் அவர்கள் தங்கி இருந்த மணலாற்றுக் காட்டுக்குள்ளேயே இவ் விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல்வடிவங்களும் கொடுக்கப்பட்டன.

இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக கடும் சமர்கள் நடந்த இடம் மணலாறு என்பது தெரிந்ததே. இந்திய படைகளுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அதிவாரமாக இருந்தது மணலாற்றுக் காட்டில் நாம் கண்டெடுத்திருந்தார்கள். அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இதன் காரணமாக இன்று, மணலாற்றுக் காட்டுக்குள் பெரியதொரு 'மாவீரர் துயிலும் இல்லம்' போராட்டக் கதைகளைக் கூறிக்கொண்டே இருக்கின்றது. இதே போன்று மற்றைய மாவட்டங்களிலும் சிறிய-சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளிகளின் கல்லறைகள் காணப்படுகின்றன.

இவ்விதம் தங்களது உடல்கள் சொந்த மண்ணுடன் கலக்கப்பட வேண்டும் என்ற போராளிகளினது மனவிருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்மதிருப்தியையும் பார்த்தோம். இனி போராளிகளது உடல்களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையில் இருக்கும் மானி – உணர்வுகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும் மனோவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டு கொள்வோம்.

இனத்தின் வழிகாட்டிகள்

மரபு வழியாக தமிழர்களிடம் இருந்து வரும் சமிபிரதாயங்களின்படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமை என அறிந்து வைத்திருக்கின்றோம் இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் இம் மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகளின் விடயத்தில் ஒப்புநோக்க முடியாது.

போராளிகள் தனிமனிதர்கள் அல்லர். அவர்கள் ஓர் இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை வெற்றிதான்.

இந்தச் சமர்களில் எமது போராளிகள் பெற்ற வெற்றிக்கு மணலாற்றுக்காடு உறுதுணையாக இருந்தது. இதனால் தங்களுடைய போராட்டவாழ்வில் ஒன்றறக்கலந்து—உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக்கப்பட வேண்டும் என போராளிகள் விரும்பினார்கள்.

மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய போராளிகள் பலர் தாங்கள் எங்கே சென்று போராடி வீரமரணமடைந்தாலும் தங்களது உடல்கள் மணலாற்றுக் காட்டுக்குள் தான் புதைக்கப்பட வேண்டும் என எழுத்து மூலம், வாய்மூலம் தலைவர் பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இதன் காரணமாக இன்று, மணலாற்றுக் காட்டுக்குள் பெரியதொரு 'மாவீரர் துயிலும் இல்லம்' போராட்டக் கதைகளைக் கூறிக்கொண்டே இருக்கின்றது. இதே போன்று மற்றைய மாவட்டங்களிலும் சிறிய-சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளிகளின் கல்லறைகள் காணப்படுகின்றன.

இவ்விதம் தங்களது உடல்கள் சொந்த மண்ணுடன் கலக்கப்பட வேண்டும் என்ற போராளிகளினது மனவிருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்மதிருப்தியையும் பார்த்தோம். இனி போராளிகளது உடல்களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையில் இருக்கும் மானி – உணர்வுகளையும்,

மாவீரர் மாண்பு மடல்

அதன் பிரதிபலிப்புக்களையும் மனோவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டு கொள்வோம்.

இனத்தின் வழிகாட்டிகள்

மரபு வழியாக தமிழர்களிடம் இருந்து வரும் சமிபிரதாயங்களின்படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமை என அறிந்து வைத்திருக்கின்றோம் இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் இம் மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகளின் விடயத்தில் ஒப்புநோக்க முடியாது.

போராளிகள் தனிமனிதர்கள் அல்லர். அவர்கள் ஓர் இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவு வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டே இருக்கும்.

அதாவது, போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகவே பயன்படும்.

எனவே நாம் போராளிகளது உடல்களைப் புதைத்து கல்லறைகளை எழுப்பி அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

இன்றுவரை ★ 3,750 திற்கும் மேற்பட்ட புலி வீரர்கள் வீரமரணமடைந்து விட்டனர். இவர்களது உயிர்த் தியாகத்தால் எமது விடுதலைப் போராட்டம் உயர்ந்ததொரு கட்டத்திற்கு நகர்த்தப்பட்டு விட்டது. ஆனால் இவர்களது நினைவை உயிர்த்துடிப்புள்ளதாக்கும் சின்னங்கள் எம்மிடம் உண்டா? என்றால், "இல்லை" என்று தான் பதில் கிடைக்கும்.

இப்போராளிகள் அனைவருக்கும் அவர்கள் பெயர் கூறும் கல்லறைகள் கட்டப்பட்டால் அவற்றைக் கண்ணுறும் அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பெறுமதியைப் புரிந்து கொள்வதுடன் அதை வென்றெடுக்க போராளிகள் கொடுத்த உயிரின் விலையையும் உணர்வுபூர்வமாகத் தெரிந்து கொள்வார்கள்.

அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர் வார இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 23

தென்மராட்சி கோட்ட கூட்டுறவாளர்கள் நடத்தும் மாவீரர் தினவிழா இன்று திங்கள் பிற்பகல் 4-30மணிக்கு தலைவர் க. மதிமகாநந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் இந்த விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர், கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சந்தன்னா, கூட்டுறவு இணைப்பாளர் மு. நல்லதம்பி ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

★ ★ ★

சாவகச்சேரி வட்டத்தில் இன்றும், நாளையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் மாவீரர்களின் பெயர்களில் வீதிகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி வட்டப் பிரிவில் 32 மாவீரர்களின் பெயர்கள் வீதிகளுக்கு சூட்டப்படவுள்ளன.

மாவீரர் வாரத்தையொட்டி சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தினர் பொது அறிவு, கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, 20 வயதுக்கு மேற்பட்டோர் என நான்கு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படும்.

இன்றும், நாளை செவ்வாய்க்கிழமையும் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத் தலைமையக மண்டபத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியில் மாவீரர் தின விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும், சிறப்பு விருந்தினராக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்புரைகளும், கலைநிகழ்ச்சி, பட்டிமண்டபம், புரட்சி காணொளிகள் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

[த-5-117-152]

மாவீரர் நாள் - 1992

மாவீரர்களே!

உலகமே வியக்கும் தலைவனைப் பெற்றோம்
உயிர்களைக் கொடுக்கும் வீரரைப் பெற்றோம்
கலக்கமா உலகு [illegible]
வரலாறினிக் [illegible]

– தமிழீழ மாவீரர் பணியகம்.

மனதைச் சுத்தப்படுத்த பாபா காட்டும் பயிற்சிகள்

"நமக்கு இப்போது சற்குரு ஆச்சாரியாரைப் போல் அறிவுச்சாலியும் புத்தபெருமானைப் போல் அன்புவாதியும் ஆன ஒருவர் தேவை" என்று சுவாமி விவேகானந்தர் எதிர்பார்த்தார். அதற்கு அமைய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அவதாரம் புவியில் இறங்கியிருக்கிறது. இன்று (23-11-92) திங்கட்கிழமை பகவான் பாபாவின் 67 ஆவது பிறந்தநாளை சாயி பக்தர்கள் கொண்டாடுகிறார்கள்.

"ஒரு பாலையின்மீது கூட்டாரும் ஒரு நுளம்பு எவ்வளவு சிறிய பருமனாகத் தோற்றுமோ, அதேபோன்று அவதாரங்களின் பெருமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவதாரங்கள் செய்யும் அற்புதங்கள் மிகமிகச் சிறிய பெறுமதியானவை, எனது மிகப்பெரிய அற்புதம் எனது அன்பாகும் (பிரேமையாகும்)" —இவ்வாறு கூறுபவர் பகவான் பாபா அவர்களே தான்.

தனது அன்புச் செயல்களிலும், தத்துவங்களையும் கோட்பாடுகளையும் தெளிவுபடுத்தும் ஆற்றலிலும் பகவான் பாபாவுக்கு நிகர் பாபாவே தான். நமது உயிர் சுவப்பிரகாசமுடைய பரமாத்மாவே தான் அது கோடான கோடி சூரியப் பிரகாசம் உடையது. நமது மனம் ஒரு சந்திரனைப்போன்றது. ஓர் உடலிலே ஆத்மா சூரியன், மனம் சந்திரன், சூரியனின் ஒளியைப் பெற்று சந்திரன் தெரிய வேண்டுமானால் சந்திரன் ஒருதளவாடி போன்று அழுக்கற்ற பிரகாசமுடையதாக இருக்க வேண்டும்.

மனம் சுத்தப்பட்ட ஒரு வருக்கு பரமாத்மாவின் பிரகாசம் மனதிலே பட்டுத் தெறித்து வெளியிலே தெரியும். மனம் சுத்தப்பட்ட ஆன்மசாதகர்கள் தமது ஆத்மாவின் ஒளியை வெளியிலும் உள்ளேயும் காண்கிறார்கள். இந்தச் சத்துவ குணமாகிய மனமும் அன்று சென்றால் ஒளி வெளியே தெரியாது. உள்ளே அடங்கியிருக்கும். இது தான் விடுதலை பெற்ற நிலையாகும்.

மனம் கரைந்து அழும்போது, மனம் பற்றியிருந்த வெளி கூடலின் பிடியும் அற்றுப் போகிறது. இந்த ஜீவன் முக்த நிலையை ஒவ்வொருவரும் அடைந்து உலகில் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதே சாயியின் விருப்பமாகும்.

இந்நிலையிலே தான் ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்யும் பேரானந்த நிலை ஏற்படுகிறது. நமது அடிப்படைப் பிரச்சினையாகிய மனதை சுத்தப்படுத்துதலுக்கு பகவான் பாபா பல வழிகளை காட்டியுள்ளார்.

பஜனை செய்தல், ஜெபதியானம் செய்தல், சேவை செய்தல், அரிய நூல்களை வாசித்தல், தத்துவங்களை ஆராய்ந்து, நாம் இறைவர் தான் என்பதைக் கண்டுபிடித்தல் போன்றன எல்லாம் ஆன்மீகப் பயிற்சிகளாகும்.

சு. சிவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

நமசிவாயம் சபாரத்தினம்

இளைப்பாறிய யாழ். இந்துக் கல்லூரி அதிபரும், "ஈழநாடு" முன்னாள் ஆசிரியருமான திருவாளர் நமசிவாயம் சபாரத்தினம் 22-11-92 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார். அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், கிளாம்பியை, டாக்டர் சிவகுமாரன், வரதேவன், சோமநாதன், ராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் ஜெகதாசன், ஜெகநாயகி, டாக்டர் புவனேஸ்வரி, டாக்டர் கலைவாணி ஆகியோரின் மாமனாரும், தர்ஷினி, அர்ச்சனா, ஆரணி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-11-92) முற்பகல் 11 மணிக்கு 110, அம்பலவாணர் வீதி, அதிதியடியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு 12 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் சிவகுமாரன்

110 அம்பலவாணர் வீதி,
அதிதியடி
யாழ்ப்பாணம் (23363)

திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம்

சிவக்கொழுந்து சுப்பிரமணியம் 22-11-92 ஞாயிறு காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சிவபாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற உப அதிபர், புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி (பிரான்ஸ்) திருமதி சிவனேஸ்வரி (புருணை), திரு. கருணாகரன் (பிரான்ஸ்), திரு. கிருபாகரன் (T R R. O. Ltd) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. தங்கராசா (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்) திரு. பிரான்சிஸ் சேவியர் (பிரான்ஸ்), திரு. சிவானந்தமூர்த்தி (நில அளவையாளர், புருணை) திருமதி பிரேமாவதி (பிரான்ஸ்), திருமதி கலாவதி (ஆசிரியை, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அருமை மாமியாரும், உதயகுமார் (கனடா), உதயசாந்தி (லண்டன்), உதயவாணி, நிரஞ்சனா (பிரான்ஸ்), நிரஞ்சன் (பிரான்ஸ்), சஞ்சீவ் (பிரான்ஸ்), சியாமளா (புருணை), தரினி (புருணை), சுபோதினி (புருணை), நிதிராசன் (புருணை), நிருபா (பிரான்ஸ்), நிருபன் (பிரான்ஸ்), நிருஜன் (பிரான்ஸ்), டிலக்ஷன், டுஷிகா, டினோஜன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23-11-92) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 10 00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. சு. கிருபாகரன் (மகன்)

23, சோமசுந்தரம் அவெனியூ,
கண்டிக்குளி. (23362)

கிதம்பரப்பிள்ளை கதிரவேல்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிதம்பரப்பிள்ளை கதிரவேல் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்கள் 22-11-1992 இல் இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் (மரேசு) அன்புக் கணவரும், கேதீசன், கோணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாநாயகம், இராசமணி ஆகியோரின் சகோதரரும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியகுட்டியின் மருமகனும், காலஞ்சென்ற முருகேசு பூபாலசிங்கத்தின் சகலனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பூ. லோகேந்திரா (பெறாமகன்)

கங்காகதம்,
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
றோயல் மோட்டோர்ஸ்

(23366)

வேலாயுதம் வீரவாகு

(நயினாதீவு)

58 சீனிவாசகம் றோட், கொட்டடியில் வசித்த வரான வேலாயுதம் வீரவாகு வவுனியாவில் 20 ஆம் திகதி காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கணேசராசா (கல்லிக் கந்தோர் யாழ்ப்பாணம்), சிவானந்தராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற வேணுகாதேவி பஞ்சலிங்கம், மகிலாதேவி ஞானபண்டிதர் (ஆசிரியை, கொட்டடி நகிலாலயம் வித்தியாசாலை) ஆகியோரது அருமைத் தந்தையாரும், ரஜனி, பஞ்சலிங்கம் (V S K வவுனியா), ஞானபண்டிதா (வர்த்தக வகுப்பு முன்னாள் மாணவர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி வி. சரஸ்வதி

58, சீனிவாசகம் றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (23364)

படைத்தளபதி கொலைக்கு புலிகள் பொறுப்பேற்காதது வியப்பானது

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொலையுண்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பேற்காவிட்டாலும் அவர்களே இதற்குக் காரணம் என பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

புலிகள் இக்கொலைக்கு பொறுப்பேற்காதது வியப்புக்குரிய விடயமாகும்.

— இவ்வாறு பி. பி. ஸி. வர்ணித்தது. இது தொடர்பாக பி. பி ஸி மேலும் தெரிவித்ததாவது :-

இப்படுகொலை நடவடிக்கை இவ்வளவு திறமையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இது விடுதலைப் புலிகளின் வேலைதான் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது என ஒருவர் கூறினார்.

கொலைக்குப் புலிகள் பொறுப்பேற்காமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

ஒன்று — உண்மையில் புலிகள் இக்கொலைக்கு பொறுப்பாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அப்படிக் கூறுவது நடைமுறையில் ஒப்புக் கொள்ள முடியாத ஊகமாகும்.

இரண்டாவது— இந்த வன்முறையைச் செய்தது தாங்கள் தான் என பொறுப்பேற்பதனால் அரசியல் ஆதாயம் எதுவும் கிடைக்கப்போவதில்லை என புலிகள் முடிவு செய்திருக்கலாம்.

இக்கொலைக்குக் காரணம் புலிகள்தான் என மக்கள் நம்பும் வரை பொறுப்பேற்றாலும் சரி பொறுப்பேற்காதுவிட்டாலும் சரி விளைவு ஒன்றுதான். ஆனால் பொறுப்பேற்றாவிட்டால் சந்தேகக் குறி ஒன்று எம்மேல் இருக்கவே செய்யும் என புலிகள் கருதியிருக்கலாம்.

மூன்றாவது — புலிகள் மேலும் தாக்குதல்களைத் தொடர்வதற்குத் தீர்மானித்திருக்கலாம். அதற்காக நடத்தி முடிந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்காமல் காத்திருக்கலாம்.

படுகொலை நடவடிக்கைக்கு கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்கு பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கொழும்பில் பாதுகாப்புப் படைகளின் எந்தத் தளபதியைக் கொன்றாலும் அது படைவீரர்களின், நிர்வாக அமைப்பின் உறுப்பினர்களின் செயற்பாடுகளை — ஊக்கத்தை — உற்சாகத்தை குன்றிடச் செய்யும். இந்த அடிப்படையில் தான் இத் தேர்வு இடம்பெற்றிருக்கிறது என கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

—இவ்வாறு பி. பி. ஸி. தெரிவித்தது.

புறப்பட்டது

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து நேற்று 'குமாரி' கப்பல், தமக்கு கொடுக்கப்பட்ட பொருள்களையும் ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. (ஒ-144)

மீட்பு நிதி மீளளிப்பு

யாழ்ப்பாணம், நவ 23

தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு நாளை செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி மற்றும் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, கரவெட்டி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் வழங்கப்படும்.

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளிப் பிரிவுகளுக்கு காலை 9 மணி தொடக்கம் மு. ப. 11 மணி வரை, சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்—

பருத்தித்துறை, வடமராட்சி கிழக்குப் பிரிவுகளுக்கு பிற்பகல் 2.15 மணி தொடக்கம் 3.30 வரையும், கரவெட்டிப் பிரிவுக்கு பிற்பகல் 3 30 மணி தொடக்கம் 4 30 மணி வரையும், பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியிலும் வைத்து கடன் மீளளிப்புச் செய்யப்படும். (ஒ)

மரண அறிவித்தல்கள்

வைரமுத்து தர்மலிங்கம்

ஊரெழுவைச் சேர்ந்த வைரமுத்து தர்மலிங்கம் 22 11-92 நேற்று சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற வைரமுத்து, முத்தாச்சிப்பிள்ளை ஆகியோரின் மகனும், திருமதி இராணிநாயகம் (முன்னாள் உபதலைமை ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும், லிங்கநாயகம் (லண்டன்), தர்மதுரை (சவுதி), தர்மச்சந்திரன், தர்மகுணலோசனா, தர்மசேகரன் (அவுஸ்திரேலியா), தர்மகுணபூசனா (ஆசிரியை, பதுளை), தர்மஜெயசூரியர் (இலங்கை வங்கி, சுன்னாகம்), தர்மகுணவதனா (ஜேர்மனி), தர்மகுணபவானி, லாசறன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், விமலாதேவி (லண்டன்), மகிலேஸ்வரி, செல்வரணவக்கமி, இன்னாத் தம்பி (சிங்கோ, கிளிநொச்சி), ஞானேஸ்வரி (அவுஸ்திரேலியா), அருளானந்தம் (கிரிஸ்லப்பன எஸ்டேட், பதுளை), ரோகிணிதேவி, சிவபாலசுந்தரம் (வலி. கிழக்கு ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி), சண்முகராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கரத்தினம், சரஸ்வதி, லட்சுமி, செல்லமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், விமலராஜ், நிமலராஜ், விக்ரர்ராஜ், மதன்ராஜ், மோகன்ராஜ், மாலினா, மோகனா, நாராயணி, குகன்ராஜ், முதா, அனுஷா, கிவநிதி, ரோகன்ராஜ், தேனுகா, ராஜ், யுசாந்தி, தேனுகா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-11-92) திங்கட்கிழமை பகல் 12 30 மணியளவில் உரும்பராயில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருவன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
உரும்பராய் (C/3885) த. தர்மஜெயசூரியர்

திருமதி கந்தையா அன்னபூரணம்

மூளாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை கந்தையா அன்னபூரணம் (தையலம்மா) நேற்றிரவு காலமானார்.

இவர் மூளாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் காலஞ்சென்ற கந்தையாவின் (சோமசுந்தரத்தின்) அன்பு மனைவியும், கந்தசாமி கமலநாயகி (ஜேர்மனி), சண்முகநாதன் ஞானேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் —

காலஞ்சென்ற கந்தசாமி (இளைப்பாறிய கலஞ்சியப் பொறுப்பாளர்), சண்முகநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும்—

தயாபரன், காலஞ்சென்ற முரவிதரன் (மேஜர் பிரசாந்), கிருபாகரன் (கனிஸ்), சுதாகரன் (கனிஸ்), சுவந்தி (ஜேர்மனி), அரவிந்தன் (லண்டன்) பார்த்திபன் (லண்டன்), மான்விழி, பவானி (கனிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்.

லக்ஷிகா, சுவர்ணிகா (யாழ்ப்பாணம் கல்லூரி மாணவிகள்), முரளிவாசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மூளாய் வீதி, அஜந்தா இல்லத்தில் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மூளாய் பித்தளை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
"அஜந்தா இல்லம்" க. தயாபரன் (பேரன்)
மூளாய். (23367)

கிதம்பரப்பிள்ளை கதிரவேல்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிதம்பரப்பிள்ளை கதிரவேல் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்கள் 22-11-1992 இல் இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் (மரேசு) அன்புக் கணவரும், கேதீசன், கோணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாநாயகம், இராசமணி ஆகியோரின் சகோதரரும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியகுட்டியின் மருமகனும், காலஞ்சென்ற முருகேசு பூபாலசிங்கத்தின் சகலனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பூ. லோகேந்திரா (பெறாமகன்)

கங்காகதம்,
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
றோயல் மோட்டோர்ஸ்

(23366)

மெரினாலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

சோதனையின் போது இப்பொருள்கள் மனித பாவனைக்கு உதவாதவை யாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதால் அப்பொருள்கள் பரிசோதனைக்கு இறக்கப்படமாட்டா என்றும் —

அவை கோழித்தீன் தயாரிப்புக்காக நேரடியாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மெரினால்" கப்பலிலிருந்து பொருள்களை இறக்குவது என முடிவு செய்யப்பட்டால், அவற்றை மாலைக்குள் இறக்கி முடிக்க முயற்சி எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மககள்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக இருந்து வந்த சம்பிரதாயம் சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றது என நீங்கள் கருதலாம். ஆனால் உங்களது பிள்ளைகளான புலி வீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத்தாகி விட்டவர்கள். நாட்டின் பொக்கிஷங்கள் மட்டும் நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள் வடிவில் என்றென்றும் மக்களிடையே இருக்க வேண்டும்.

★ —1991 ஐப்பசியில்
(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிகேஷன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.